**ஜூலை – 04**

# தேசியச் செய்திகள்

## இந்திரஜால்

- ஹைதராபாத்தில் அமைந்துள்ள தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமான க்ரீன் ரோபோட்டிக்ஸ் (Grene Robotics) என்ற நிறுவனமானது இந்தியாவில் முதல் முறையாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 'இந்திரஜால்' எனப் படும் ஆளில்லா ஒரு விமான எதிர்ப்புக் கவச அமைப்பினை வடிவமைத்துக் கட்டமைத்துள்ளது.
- இந்தக் கவச அமைப்பானது 1000 முதல் 2000 ச.கி.மீ. வரையிலான பரப்பளவை தனித்துப் பாதுகாக்கும் திறனைக் கொண்டுள்ளது.
- வான்வழி ஆபத்துகளை ஆராய்ந்து அதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதன் மூலம் வான்வழி தாக்குதல்களிலிருந்து இது பாதுகாப்பு அளிக்கிறது.
- ஆளில்லா வான்வழி விமானங்கள், வெடிபொருள் ஆயுதங்கள், மற்றும் குறைந்த ரேடார் வரம்புடைய குறுக்கு வெட்டு இலக்குகள் போன்றவை வான்வழியிலான ஆபத்துகளாகும்.

## பசுமை சரக்கு வழித்தடம் – 2 – முதல் பயணம்

- கடல்வழி சரக்குப் போக்குவரத்து அமைச்சகமானது பசுமை சரக்கு வழித்தடம் – 2 வழியிலான முதல் பயணத்தைத் தொடங்கி வைத்துள்ளது.
- புதிதாக தொடங்கப்பட்டுள்ள இந்த சேவையின் முதல் கட்டமானது கொச்சினை பேய்ப்பூர்-ஆழிக்கல் ஆகியவற்றுடன் இணைக்கும், பிந்தையக் காலகட்டங்களில் கேரளாவிலுள்ள கொல்லம் துறைமுகமும் இணைக்கப்படும்.
- கடல்சார் வர்த்தகத்தினை மேம்படுத்துவதன் மூலம் முக்கிய மற்றும் இதர துறைமுகங்களுக்கிடையேயான இணைப்பு மற்றும் இணைதிறனையும் இது மேம்படுத்தும்.

## உடல் பருமனைத் தடுப்பது குறித்த தேசிய மாநாடு – நிதி ஆயோக்


- தாய்வழி, இளம்பருவ மற்றும் குழந்தைப் பருவ உடல் பருமனைத் தடுப்பது குறித்த ஒரு தேசிய மாநாடானது நிதி ஆயோக் அமைப்பினால் நடத்தப்பட்டது.
- இந்த மாநாட்டின் தலைவர் டாக்டர் V.K. பால் மற்றும் துணைத் தலைவர் டாக்டர். R. ஹேமலதா ஆகியோர் ஆவர்.
- நிதி ஆயோக் அமைப்பானது உடல்பருமனை ஒரு "அரவமற்ற தொற்றுநோய்" (silent epidemic) என விவரித்துள்ளது.

## பயிர் காப்பீட்டு விழிப்புணர்வுப் பிரச்சாரம்

- வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சர் நரேந்திர சிங் தோமர் ஃபசல் பீம யோஜனா திட்டத்திற்கான பயிர் காப்பீட்டு விழிப்புணர்வுப் பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்தார்.
- இது பயிர் காப்பீட்டு வாரத்தின் போது தொடங்கப்பட்டது (ஜூலை 1 முதல் ஜூலை 7

வரை).

- பிரதான் மந்திரி ஃபசல் பீம யோஜனா திட்டமானது 2016 ஆம் ஆண்டு பிப்ரவரி 18 அன்று தொடங்கப் பட்டது.
- ஒவ்வொரு விவசாயிக்கும் காப்பீட்டு வசதியை வழங்கும் நோக்கில் இந்த திட்டமானது தொடங்கப் பட்டது.
- கடந்த வருட மகசூல் தரவுகளில் இருக்கும் வருடாந்திர வணிக (அ) தோட்டப் பயிர்கள் உட்பட உணவு மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களுக்கும் இத்திட்டம் மூலம் காப்பீடு வழங்கப் படும்.




## தொழில்துறை ஆராய்ச்சி ஈடுபாட்டு முன்னெடுப்பிற்கான நிதி

- அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியமானது இன்டெல் இந்தியா நிறுவனத்துடன் இணைந்து இம்மாதிரியான முதல் வகையிலான ஆராய்ச்சி முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- இது "தொழில்துறை ஆராய்ச்சி ஈடுபாட்டிற்கான நிதி" (Fund for Industrial Research Engagement – FIRE) எனப்படும்.
- இது இந்தியாவில் மேம்பட்ட தொழில்நுட்பம் சார்ந்த உள்ளார்ந்த ஆராய்ச்சிகளில் உதவும்.
- இது உள்ளார்ந்த தொழில்நுட்பப் பகுதிகளில் (செயற்கை நுண்ணறிவு, இயந்திர கற்றல் போன்ற) தொழில்துறை சார்ந்த வாய்ப்புகளைக் கைப்பற்றுவதற்கு இந்திய ஆராய்ச்சியாளர்களுக்கு உறுதுணையாக இருக்கும்.
- அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியமானது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும் ஒரு சட்டரீதியிலான அமைப்பாகும்.
- FIRE முன்னெடுப்பானது கூட்டு நிதி வழங்கீட்டு முறையுடன் கூடிய அரசு மற்றும் தொழில்துறை ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## இணையவழி திறன்கள் மற்றும் தேசிய திறன் அறிக்கை

- இந்த அறிக்கையானது சர்வதேச உத்திசார் ஆய்வுகளுக்கான கல்வி நிறுவனத்தினால் சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- ஒவ்வொரு நாட்டினுடைய இணைய வழி சூழல் அமைப்பினையும், நாட்டின் சர்வதேசப் பாதுகாப்பு, பொருளாதாரப் போட்டித் தன்மை மற்றும் இராணுவ விவகாரங்களில் அது எவ்வாறு தலையிடுகிறது என்பதையும் இந்த அறிக்கையானது பகுப்பாய்வு செய்கிறது.
- இந்த அறிக்கையானது உலக நாடுகளை இணையவழி திறன்களின் (அதிகாரங்கள்) அடிப்படையில் மூன்று அடுக்குகளாகப் பிரித்துள்ளது.
- முதல் அடுக்கு – முறைமைகளின் (methodology) அனைத்துப் பிரிவுகளிலும் உலக அளவில் முன்னணி பலம் கொண்ட நாடுகள்.
- இந்த அடுக்கிலுள்ள ஒரே நாடு அமெரிக்கா ஆகும்.
- இரண்டாம் அடுக்கு – சில பிரிவுகளில் மட்டும் உலகளவில் முன்னணி பலங்களை கொண்ட நாடுகள்.
- ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்சு, இஸ்ரேல், ரஷ்யா மற்றும் ஐக்கிய ராஜ்ஜியம் ஆகியவை இந்த அடுக்கில் இடம் பெற்றுள்ளன.
- மூன்றாம் அடுக்கு – சில பிரிவுகளில் பலத்தினையும் இதர சில பிரிவுகளில் குறிப்பிடத்தக்க பலவீனத்தினையும் கொண்டுள்ள நாடுகள்.
- இந்தியா இந்த அடுக்கில் உள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சுரபி மின்னணுக் குறியீடு

- துவாரா இ-டெய்ரி சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனமானது IFFCO – டோக்கியோ ஜெனரல் இன்சூரன்ஸ் என்ற நிறுவனத்துடன் இணைந்து செயற்கை நுண்ணறிவினால் (AI) இயங்கும் டிஜிட்டல் அடையாளக் குறியீடு ஒன்றினை

வெளியிட்டுள்ளது.

- இதற்கு சுரபி மின்னணுக் குறியீடு எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- இது முகவாய்ப் பகுதியின் அடையாளத்தைக் கொண்டு கால்நடைகளை அடையாளம் காண்கிறது.
- முகவாய்ப் பகுதி என்பது விலங்கினங்களின் முகத்தினுடைய முன்னோக்கி நீண்டுள்ள பகுதி (மூக்கு மற்றும் வாய் உட்பட) ஆகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## LowCarbon.Earth

- ஐக்கிய நாடுகள் அவையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பானது மேசிவ் எர்த் என்ற அறக்கட்டளையுடன் இணைந்து LowCarbon.Earth எனும் தளத்தினைத் தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- புத்தாக்க நிறுவனச் சூழலினை உயர்த்துவதற்கும் ஆசிய பசிபிக் பகுதியில் குறைந்த அளவிலான கார்பன் வெளியீட்டு வாழ்க்கை முறைக்கு மாறுவதை ஊக்குவிக்கச் செய்வதற்காகவும் இது தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த தினமானது பெருநிறுவனங்கள், முன்னணித் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் தொழில்துறை ஆலோசக அமைப்புகள் ஆகியவற்றுடன் புத்தாக்க நிறுவனங்கள் தொடர்பு கொள்வதற்கான ஒரு தளத்தினை வழங்கும்.
- மேம்பட்ட மற்றும் நிலையான தொழில்நுட்பங்களின் முன்னணிப் பிரிவுகளில் தொழில்துறைக்கான கூட்டுத் திறனை உருவாக்குவதில் இது உறுதுணையாக இருக்கும்.

## கருப்பு நிற வயிறுடைய பவளப் பாம்பு – உத்தரகாண்ட்



- வரலாற்றில் முதல்முறையாக உத்தரகாண்ட்டின் வனப்பகுதிகளில் கருப்புநிற வயிறுடைய பவளப் பாம்புகள் இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்த பாம்பு வகையானது எலாப்பிடே குடும்பம் மற்றும் சினோ மிக்ரூரஸ் (Sinomicrurus) என்ற வகை இனத்தினைச் சேர்ந்ததாகும்.
- இதன் அறிவியல் பெயர் S. நிக்ரிவெண்டர் என்பதாகும்.
- இது முசௌரி வனப் பகுதியிலுள்ள பெனோக் வனவிலங்கு சரணாலயத்தின் பத்ராஜ் வனப்பிரிவில் கண்டறியப்பட்டது.

# மாநிலச் செய்திகள்

## மேகக்கணிமை சார்ந்த சுகாதார திட்டம் – டெல்லி

- 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் மேகக் கணிமை அடிப்படையிலான சுகாதார நல தகவல் மேலாண்மை அமைப்பானது உருவாக்கப்படும் என டெல்லி அரசு தெரிவித்துள்ளது.
- இந்தியாவில் இந்த அமைப்பினைக் கொண்டுள்ள ஒரே இடமாக டெல்லி உருப் பெறும்.
- இதனோடு, ஒரு சுகாதார உதவி எண்ணும் வழங்கப்படும்.
- டெல்லியைச் சேர்ந்த மக்களுக்கு மின்னணு சுகாதார அட்டைகளை வழங்குவதற்காக சிறப்புக் கணக்கெடுப்புகளும் மேற்கொள்ளப்படும்.

## தகவல் தொழில்நுட்பக் கொள்கை – ஆந்திரப் பிரதேசம்

- ஆந்திரப் பிரதேச அரசானது தனது புதிய ஆந்திரப் பிரதேச தகவல் தொழில்நுட்பக் கொள்கை 2021-24 என்ற கொள்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்தக் கொள்கைக்கு முதலமைச்சர் Y.S. ஜெகன்மோகன் ரெட்டி தலைமையிலான மாநில அமைச்சரவையினால் ஒப்புதல் அளிக்கப் பட்டது.
- இந்தக் கொள்கையானது 2024 ஆம் ஆண்டு மார்ச் 31 வரை நடைமுறையில் இருக்கும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ஐசியஸ் துகாரமி

- மகாராஷ்டிராவின் தானே – கல்யாண் பகுதியில் குதிக்கும் திறனுடைய சிலந்திகளின் இரண்டு புதிய இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- இவற்றுள் ஒரு இனத்திற்கு துணிச்சல்மிக்க காவல் அதிகாரி துகாராம் ஓம்பிளே என்பவரின் நினைவாகப் பெயரிடப்பட்டுள்ளது.
- இவர் 26/11 மும்பை தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தார்.
- இந்தச் சிலந்தி இனமானது ‘ஐசியஸ் துகாரமி’ என அழைக்கப் படுகிறது.

# முக்கிய தினங்கள்

## அடையாளம் காண முடியாத பறக்கும் பொருட்களுக்கான உலகளாவிய தினம் – ஜூலை 02

- இது உலக அடையாளம் காண முடியாத பறக்கும் பொருட்கள் அமைப்பினால் அனுசரிக்கப் படுகிறது.
- அடையாளம் காண முடியாத பறக்கும் பொருட்கள் குறித்த ஒரு விழிப்புணர்வை பரப்புவதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- மேலும் இந்த பிரபஞ்சத்தில் நாம் மட்டும் இல்லை என்பதைப் பற்றி சிந்திக்கவும் இந்நாள் மக்களை ஊக்குவிக்கிறது.

## உலக விளையாட்டுத் துறை பத்திரிக்கையாளர் தினம் – ஜூலை 02

- விளையாட்டுத் துறை பத்திரிக்கையாளர்களின் பணிகளுக்கு அங்கீகாரம் அளிப்பதையும் அவர்களது பணியில் சிறந்து செயலாற்ற அவர்களுக்கு ஊக்கமளிப்பதையும் இந்த தினமானது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலகெங்கிலும் உள்ள பத்திரிக்கையாளர் சங்கங்களானது சர்வதேச விளையாட்டுத் துறை பத்திரிக்கையாளர் சங்கத்தினால் ஒன்று திரட்டப் பட்டு ஆரம்பிக்கப் பட்டது.
- உலக விளையாட்டுத் துறை பத்திரிக்கையாளர் தினமானது 1994 ஆம் ஆண்டில் சர்வதேச விளையாட்டுத் துறை பத்திரிக்கையாளர் சங்கத்தினால் நிறுவப்பட்டது.




# இதரச் செய்திகள்

## Salute Doctors – ஐசிஐசிஐ வங்கி

- ஐசிஐசிஐ வங்கியானது மருத்துவர்களுக்கான இந்தியாவின் மிகவும் விரிவான வங்கி சார் தீர்வுகளை தொடங்கியுள்ளது.
- இதற்கு "Salute Doctors" எனத் தலைப்பிடப்பட்டுள்ளது.
- இது மருத்துவத் துறை மாணவர் முதல் மூத்த மருத்துவர் வரை ஒவ்வொரு மருத்துவருக்கும் தனிப் பயனாக்கப்பட்ட மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட சேவைகளை வழங்குகிறது.
- இது ஐசிஐசிஐ ஸ்டாக் என்ற மென்பொருள் மூலம் வழங்கப்படுகிறது.



## சலாம் தில்சே – HDFC வங்கி

- HDFC வங்கியானது சலாம் தில்சே எனும் முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- இது மருத்துவர்களின் பங்களிப்பினைக் கொண்டாடவும் அதனை அங்கீகரிக்கவும் வேண்டி நேரத்தை ஒதுக்கக் கோரி அனைவரையும் ஊக்குவிக்கிறது.
- பொது மக்கள், மருத்துவர்களுக்குத் தெரிவிக்க எண்ணும் நன்றியை இதன் மூலம் பகிரலாம்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★